# திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## இணையவழி மூலமான வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு 2017/2018 (வெளிவாரி)

**Bachelor of Business Management (Online) Degree Programme – 2017/2018 (External)**

## புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை – 2017

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தினால் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினூடாக நடத்தப்படும் தமிழ் மொழி மூலமான மூன்று வருட கால இணையவழி வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்:**

- ❖ க.பொ.த. (உ/த) பரீட்சை – 2016 அல்லது அதற்கு முன்னர் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானவர்கள்

  அல்லது
- ❖ பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு சமமான வேறு தகைமையைக் கொண்டவர்கள்.

**வியாபார முகாமைத்துவமாணி முதலாம் வருட தேர்வில் இருந்து விலக்களிப்பு கோருதல்:**

- ❖ பல்கலைக்கழக மூதவையினால் அங்கீகரிக்கப்பட்ட, 1ம் வருடத் தேர்வில் இருந்து விலக்களிப்பு கோருவதற்கான தகமைகளைக் கொண்டிருப்பவர்கள், வியாபார முகாமைத்துவ மாணி **இரண்டாம் வருட கற்கைநெறிக்கு**, உரிய தகமைகளைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்க முடியும்.

**முக்கிய குறிப்பு** :- இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் பட்டப்படிப்பொன்றுக்காக பதிவு செய்தவர்கள் விண்ணப்பிக்கலாகாது.

**மாணவர் தெரிவு:**

விண்ணப்பதாரிகள் பொது உளச்சார்புப் பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சை அல்லது இரண்டும் மூலம் தெரிவு செய்யப்படுவர். பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**விண்ணப்பப்படிவங்களைப் பெறுதல்:**

1. விண்ணப்பப்படிவத்தினை நேரடியாக பெற விரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில், விண்ணப்ப மற்றும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 1000 ஐ செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்து யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம் மற்றும் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் இருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
2. விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டினை www.codl.jfn.ac.lk எனும் இணைய முகவரியிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பித்தல்:**

விண்ணப்பங்கள் யாவும் பிரதிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் **"இணையவழி மூலமான வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு"** என தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி : 07.12.2018 (விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)**

மேலதிக விபரங்களுக்கு: 021 222 1106, 021 222 3610, 021 222 3612 என்ற தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்

07.11.2018